DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | SC 45/2014 |
| | Prosecution |
| Deposition of witness for | PW41 |
| Name | வி. வி. சிவக்குமார் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 14th day of October 2022.

**14.10.2022.**

முதல் விசாரணை:-

நான் தற்போது தருமபுரி மாவட்டம் கோட்டப்பபடி காவல் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2014ம் வருடம் நான் குன்னூர் நகர ஆய்வாளராக பணியாற்றியபோது எனக்கு முந்தியா ஆய்வாளர் திரு. ரவிகுமார் மற்றும் மணி என்பவர்கள் புலன் விசாரணை செய்து வைத்திருந்த குன்னூர் நகர் காவல் நிலைய குற்ற எண் 426/2012 U/s 174 Cr.P.C. Altered to 302 IPC வழக்கினை என்னுடைய தொடர் விசாரணைக்கு எடுத்துகொண்டு இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கையெழுத்து ஒப்பீடுற்கு அனுப்பபப்பட்ட அறிக்கையினை 14.2.2014 அன்று அறிக்கை பெற்றும் மேற்படி கையெழுத்தினை ஆய்வு செய்த ஆவண நிபுணர் ஈ.டி. தாமரைசெல்வன் என்பவரை விசாரணை செய்து அவரது வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்னர் வழக்கின் உதவி இயக்குநர் குற்ற வழக்கு தொடர்பு துறை அவரிடம் மாதிரி

குற்ற அறிக்கை பெற்று எதிரி முத்துசாமி என்ற செல்வராஜ் மீது இதச பிரிவுகள் 120 பி உடன் இணைந்த 302 மற்றும் 201 பிரிவின்படியும் எதிரி முபாரக் என்பவர் மீது இதச பிரிவுகள் 120 பி உடன் இணைந்த 302 மற்றும் 201 பிரிவின்படியும், ரவி என்பவர் மீது இதச பிரிவுகள் 120 பி உடன் இணைந்த 302 மற்றும் 201 பிரிவின்படியும் அஜந்தா என்பவர் மீது 109 உடன் இணைந்த 302, 201 இதச படியும் ராஜாம்மாள் என்பவர் மீது இதச பிரிவுகள் 120 பி உடன் இணைந்த 302 மற்றும் 201 பிரிவின்படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **இந்த வழக்கில் 1, 2 மற்றும் 3 எதிரிகளின் மாதிரி கையொப்பங்கள் ஒப்பீடு செய்ய அவர்களது கையொப்பம் பெறுவதற்கு எனக்கு முன் இருந்த ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் நீதிமன்றத்தில் இருந்து கோவை மத்திய சிறைக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் அலுவலக நகல் அசாஆ 56 ஆகும்.**

<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

கையெழுத்து நிபுணரை நான் விசாரித்தபோது அவர் Q2 என்று குறியீடு செய்யப்பட்ட கையொப்பத்தினை பொறுத்து எந்த ஒரு கருத்துரையும் வழங்க இயலாது என எனது விசாரணையில் தெரிவித்திருக்கிறார் என்றால் சரிதான். அதேபோல A1 முதல் A25 என குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் நேரடியாக முதல் எதிரியிமிருந்து பெறப்பட்டவை அல்ல என்றால் சரிதான். சா.பொ.2 லார்ட்ஜ் பதிவேட்டில் இருந்த அசா ஆ 5 கண்ட கையெழுத்துக்கள் அந்த லார்ட்ஜ்காரர்களின் கையெழுத்துக்கள் என்றாலும் அதனால் தான் அவை எதிரிகளிடமிருந்து வாங்கிய கையொப்பங்களுடன் ஒத்து போகவில்லை என்றாலும் அதன்பின்னர்

லார்ட்ஜ்காரர்களின் ஒத்துழைப்புடன் 1 முதல் 25 வரையிலான ஆவணங்களை இந்த வழக்கிற்காக உருவாக்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு முன் புலன் விசாரணை மேற்கொண்ட இரண்டு ஆய்வாளர்களும் மேற்கொண்டிருந்த புலன் விசாரணையை நான் எந்த வகையிலும் சரிபார்க்காமல் 1, 2 எதிரிகள் மீது இந்த இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு முன் புலன் விசாரணை மேற்கொண்ட இரண்டு ஆய்வாளர்களும் மாதிரி கையொப்பங்கள் பெறுவதற்கான சட்ட ரீதியான நடைமுறைகள் பின்பற்றவில்லை என்று சொன்னால் அதை மறுக்கிறேன்.

<u>4 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

எனக்கு முன் புலன் விசாரணை மேற்கொண்ட ஆய்வாளர்கள் தயார் செய்திருந்த ஆவணங்கள் அனைத்தையும் நான் சரிபார்த்துதான் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ராமேஷ் இறந்த பின்னால் அவருடைய வாரிசு சான்று மாரண்ணன் என்பவர் வாங்கி 4 மற்றும் 5 எதிரிகள் சிறையில் இருக்கும்போது அவர்களுடைய சொத்தை எல்லாம் அவர் அபகரித்துவிட்டார் என்றாலும் அதற்காக இந்த புகார் என்றாலும் சரியல்ல. எனக்கு முன் புலன் விசாரணை மேற்கொண்ட ஆய்வாளர்களின் விசாரணையை நான் சரிவர ஆய்வு செய்யாமல் 4 மற்றும் 5 எதிரிகள் மீது இந்த இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் அதை நான் மறுக்கிறேன்.

<u>மறு விசாரணை</u>:- இல்லை.